செ.வெ.எண்.20 நாள்: 07.12.2020

தூத்துக்குடி மாநகராட்சி மற்றும் பல்வேறு தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கியுள்ளதை அப்புறப்படுத்தும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்தார். மேலும் தூத்துக்குடி பாத்திமாநகர் சமுதாய கூடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை நேரில் சந்தித்து அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்ய அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

---

தூத்துக்குடி மாநகராட்சி மற்றும் பல்வேறு தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கியுள்ளதை அப்புறப்படுத்தும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று இன்று (07.12.2020) ஆய்வு செய்தார்.

தூத்துக்குடி முத்தையாபுரம், கேம்ப் 2 அருகில் உள்ள சூசைநகர் பகுதியை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டார். அதனைத்தொடர்ந்து தூத்துக்குடி மாநகராட்சி ஜார்ஜ் ரோடு பகுதியிலும், பாத்திமாநகர் பகுதியிலும், திருச்செந்தூர் ரோடு பகுதியிலும் தாழ்வான பகுதிகளில் மழை வெள்ள நீர் தேங்கியுள்ளதையும், மாநகராட்சியின் மூலம் மோட்டார் வைத்து மழைநீர் அப்புறப்படுத்தப்பட்டு வரும் பணிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டார். மேலும் மதுரை, திருச்சி உள்ளிட்ட மாநகராட்சிகளில் இருந்து கூடுதலான மோட்டார்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டார். தொடர்ந்து தூத்துக்குடி பாத்திமாநகர் தாழ்வான பகுதியில் உள்ள 200க்கும் மேற்பட்ட மக்கள் சமுதாய கூடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு அவர்களுக்கு சுகாதார துறையின் மூலம் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளுமாறும், அனைவரும் முககவசம் அணிய வேண்டும் எனவும் அறிவுறுத்தினார். மேலும் அனைவருக்கும் உணவு உள்ளிட்ட வசதிகளை உடனடியாக ஏற்பபாடு செய்ய உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது தூத்துக்குடி வட்டாட்சியர் திரு.ஜஸ்டின் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.